# முதலை



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com

# முதலை

உலகில் பல்வேறு உயிரினங்கள் தாங்கள் வாழும் சூழ்நிலைக்கு ஏற்ப தங்களை தகவமைத்துக் கொண்டுள்ளன. அவ்வாறு தகவமைத்துக் கொண்ட உயிர் இனங்களில் ஈரிட வாழ்வியான (நிலம், நீர்) முதலைகள் பரிணாம வளர்ச்சியில் முதல் இடத்தில் இருக்கின்றன. முதலைகள் பல்லி இனத்தைச் சார்ந்த ஊர்வன விலங்கு ஆகும். இவை டைனோசரஸ் காலத்தைச் சார்ந்த விலங்காக ஆய்வாளர்கள் கருதுகிறார்கள். டைனோசரஸ் இனம் பெரு வெடிப்பில் (நெருப்பு) அழிந்தபோது முதலை இனம் தப்பித்து பல்வேறு இன்னல்களைச் சந்தித்து தற்போது உள்ள உடல் அமைப்பைப் பெற்று வாழ்வதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.



முதலைகள் குரோக்கடைல்டை (crocodylidae) குடும்பத்தையும், குரோக்கடைல் (crocodilia) என்ற வரிசையையும் சார்ந்ததாகும். இவை நிலத்திலும் நீரிலும் வாழும் உயிரினமாக இருந்தாலும் பெரும்பாலும் இவை நீரில் தான் இருக்கின்றன. நான்கு கால்களையும் வலுவான வாலினையும் கொண்ட இது ஆப்பிரிக்கா, ஆசியா, அமெரிக்கா, ஆஸ்திரேலியா ஆகிய கண்டங்களில் உள்ள ஆறுகளிலும் ஏரிகளிலும் உப்பு நீரிலும் வாழ்கின்றன. முதலைகள் நீரில் நீந்துவதற்கு ஏதுவாக தனது கால்களை மடக்கி வாலை இடப்புறமாகவும், வலப்புறமாகவும் அசைத்து நீந்தும். சில சமயங்களில் கால்களை துடுப்பு போல சட்டெனத் திரும்புவதற்கு உபயோகித்து தண்ணீரில் வெகு வேகமாக நீந்தும். முதலை குளிர் ரத்தம் கொண்ட விலங்காகும். முதலையின் உடல் வெப்பநிலை 30-33*c (செல்சியஸ்) என்ற நிலையில் இருக்க வேண்டும். இல்லையென்றால் வெப்பம் அதிகமாகி இறக்க நேரிடும். மேலும் முதலைக்கு வியர்வை சுரப்பிகள் கிடையாது. எனவே முதலை வாயைத் திறப்பதன் மூலம் வெப்பத்தை வெளியேற்றுகிறது.

சில சமயம் தரையில் ஒரு கிலோ மீட்டர் தூரம் வரை முதலை நடப்பதால் உடலில் வெப்பம் சீராக்கப்படுவதோடு அவற்றின் செரிமானத்திற்கும் உதவுவதாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர்.

## முதலையின் உடல்:-

பிற உயிரினங்களுக்கு இல்லாத ஒரு சிறப்பு முதலைக்கு உண்டு. மற்ற உயிரினங்களுக்கு மேல் தாடை அசையாது. ஆனால் கீழ் தாடை அசையும். இதற்கு மாறாக முதலைகளுக்கு கீழ்தாடை அசையாது ஆனால் மேல்தாடை அசையும். முதலையின் தாடைப் பகுதியில் ஏழு தசை நார்கள் உள்ளன. அவற்றில் ஒரு தசை நார் உணவை விழுங்கவும் மற்றவை வாயைத் திறக்கவும், மூடவும் பயன்படுகிறது. இதன் கடிதிறன் மற்ற உயிரினங்களை விட அழுத்தம் நிறைந்ததாக ஆய்வாளர்கள் கூறுகின்றனர். முதலையின் வகைகளைப் பொருத்து அதன் பற்களும் கடிதிறனும் மாறுபடுகிறது.



உப்பு நீர் முதலையின் கடிதிறன் 1678.292 கிலோ கிராமாக கணக்கிடப்பட்டுள்ளது. நன்னீர் மற்றும் உப்பு நீர் முதலைகளுக்கு 80 பற்களும், காடியல் முதலைக்கு 110 பற்களும் உள்ளன. முதலையின் பற்கள் விழுந்தாலும் திரும்ப முளைக்கும் தன்மையுடையது. அது தனது வாழ்நாளில் 80 முறைகளுக்கு மேலாக பற்கள் விழுந்து முளைக்கின்றன. முதலையின் பெரும்பான்மையான பற்கள்



நன்னீர் முதலை



உப்பு நீர் முதலை

கூர்மையானதாகவும் சில பற்கள் மழுங்கியதாகவும்இருக்கும்.

முதலையின் தாடையிலும் வாயிலும் தொடு உணர்வு மிக அதிகமாக இருக்கும். முதலையின் தாடையில் ஆயிரக் கணக்கான உணர் உறுப்புக்கள் உள்ளன. இவ்வுறுப்புக்களில் உள்ள நரம்புகள் நேரடியாக மண்டை ஓட்டிற்குள் செல்வதால் இதன் தொடு உணர்வு அதிகமாக இருக்கும். இவ்வுணர்வின் மூலமாக தான் வாயில் இருப்பது உணவா? அல்லது தனது குட்டியா? என்பதனை அறிந்துகொள்ள முடிகிறது. முகத்தின் முன் முனையில் இரண்டு மூக்குத் துளைகள் இருக்கும். இத்துளைகளில் உள்ள வால்வு போன்ற மடிப்புகள் சுவாசக் குழாயில் நீர் உட்புகாதவாறு மூடிக்கொள்ளும். முதலையின் மோப்பத் திறன் மிக அதிகம். முதலையின் ஒரு மூக்குத் துளை வாசனையை நன்கு அறியவும், மற்றொரு துளை சுவாசிக்கவும் பயன்படுகிறது. சுவாசப்பகுதியில் உள்ள வால்வானது தொண்டைப்பகுதியுடன் இணைக்கப்பட்டுள்ளதால் தரையில் படுத்து இளைப்பாறும் சமயத்தில் தொண்டையின் மூலமாகவும் நீரில் இருக்கும் போது மூக்கின் மூலமாகவும் சுவாசிக்கிறது.



முதலையின் கண்கள் பக்கவாட்டில் அமைந்திருப்பதால் தன்னைச் சுற்றியுள்ள அனைத்துக் காட்சிகளையும் பார்க்கமுடியும். முதலைக்கு மேல் இமை, கீழ் இமை, உள்ளிமைப் படலம் என மூன்று இமைகள் உள்ளன. மேல் மற்றும் கீழ் இமைகள் தடிமனாக இருப்பதால் வேட்டையின் போது கண்களில் காயம் ஏற்படாமல் பாதுகாக்கிறது. முதலை நீருக்குள் மூழ்கியிருக்கும் போது உள்ளிமையான சவ்வுப்பகுதி கண்ணின் மேல் பகுதியைக் காக்கின்றன. முதலையின் விழி பிளவுபட்டது போன்று காணப்படும். மற்ற உயிரினங்களைப் போல இவற்றின் கண்கள் இரவில் ஒளிரும் வண்ணம் உள்ளது. இந்த ஒளி இரவில் முதலையை வேட்டையாட உதவுகிறது. நீருக்குள் இருக்கும் போது முதலையின் பார்வைத்திறன் சற்று மங்கலாக காணப்படும் .




செவியிலே ஒரு குட்டையான புறஞ்செவித்துளைகள் உண்டு. செவியின் அருகே அசையக்கூடிய தோல் மடிப்பு நீர் உட்புகாதபடி இறுக்கி மூடிக் கொள்ளும். முதலையின் தோல் கடினமானக் கொம்புப் பொருளாலானது. இது பார்ப்பதற்கு செதில்கள் போன்று இருக்கும். முதுகில் உள்ள இந்த செதில்கள் ஒழுங்கான குறுக்கு வரிசைகளாக அமைந்திருக்கும். இந்த முதுகு செதில்களுக்கு அடியில் எலும்புத் தகடுகள் இருக்கும். வாலிலே இந்த செதில்கள் வரிசையாக உயர்ந்து



காணப்படும் வாலின் முன் பகுதியில் இரண்டு வரிசையாகவும், பின் பகுதியில் ஒரே வரிசையாகவும் இருக்கும். முதலைகளின் வால் உடலைவிட மிகத் திடமானதாக இருக்கும். அது நீரில் நீந்துவதற்கு உதவும் உறுப்பாக இருப்பதன்றித் தற்காப்புக்கும், மற்ற உயிர்களை அடித்துத் தாக்குவதற்கும் உதவுகின்றன. முதலையின் தோல் சதுரவடிவில் கட்டடங் கட்டடமாக கறுப்பு மற்றும் சாம்பல் நிறத்தில் இருக்கும். அதன் அடிப்பகுதி வெள்ளை நிறத்தில் காணப்படும் . முதலையின் முன் கால்களில் ஐந்துவிரல்களும் பின் கால்களில் நான்கு விரல்களும் இருக்கும்.

முதலையின் இதயம் தனிச்சிறப்பு வாய்ந்தது. பொதுவாக ஊர்வன விலங்குகளுக்கு மூன்று இதய அறைகள் இருக்கும். ஆனால் முதலைக்கு நான்கு அறைகள் உள்ளன. முதலைகள் நீருக்குள் சுவாசிக்க காற்றை நுரையீரலில் சேமித்துக் கொள்ளும். தண்ணீருக்குள் தனது இரத்த ஓட்டத்தை குறைத்துக் கொள்வதன் மூலமாக தனது இதயத் துடிப்பை மெதுவாக துடிக்கச் செய்வதால் முதலையால் நீண்டநேரம் தண்ணீருக்குள் இருக்க முடிகிறது.




இதயம்

ஆண் பெண் முதலைகள் ஒரே மாதிரியான தோற்ற அமைப்பைக் கொண்டு இருந்தாலும் பெண் முதலைகளை விட ஆண் முதலைகள் நீளமாக இருக்கும். மற்ற படி ஆண், பெண் வேறுபாடு காண்பது மிக அரிது. முதலையின் வகையைப் பொறுத்தே இவற்றின் எடை வேறுபடுகிறது. நன்னீர் முதலையின் எடை 100 கிலோவாகவும் அதன் நீளம் 7.5 - 9.5 அடியாகவும் இருக்கும். உப்பு நீர் முதலையின் எடை 1000 கிலோவாகவும் 23 அடி நீளம் வரை வளரக்கூடியது. பெண் முதலைகள் ஆண் முதலைகளைவிட எடை மற்றும் நீளம் குறைவாகக் காணப்படும். முதலை பார்ப்பதற்கு பெரியதாக இருந்தாலும் அதன் மூளை வாதாங் கொட்டையின் (walnut) அளவே இருக்கும் அதன் எடை 3.5 m ஆகும்.

## இனப்பெருக்கம்:-

ஜனவரி முதல் மே மாதம் வரை முதலைகளின் இனப்பெருக்க காலமாகும். பெண் மற்றும் ஆண் முதலைகள் 10 ஆண்டுக்ளுக்குப் பிறகே இனப்பெருக்கத்திற்குத் தயாராகின்றன. இனப்பெருக்கத்திற்குத் தயாராகும் ஆண் முதலை தண்ணீருக்கு வெளியே தனது மூக்கை நீட்டி தண்ணீரை சத்தமாக வெளியேற்றும். அதன் பிறகு தனது உடலை தண்ணீரின் மேற்பரப்பில் வைத்துக்கொண்டு ஒரு சலசலப்பையும் ஏற்படுத்தும். அதன் பிறகு வாலினை தண்ணீரில் ஓங்கியடித்து ஒலியெழுப்பும். ஆண் முதலையின் இத்தகைய செயலில் ஈர்க்கப்படும் பெண் முதலை அதனுடன் இணைசேரும். இந்த இணை ஆண்டுக்கு ஆண்டு மாறுபடும். பெண் முதலை நீர்நிலை ஓரத்தில் உள்ள மேட்டில் 10 அடி சுற்றளவில் 3 அடி உயரத்திற்கு குழியைத் தோண்டி அதனுள் முப்பது முதல் ஐம்பது முட்டைகள் வரை இடும். சில முதலைகள் கூடுதலாக தொண்ணூறு முட்டைகள் வரை இடும். முட்டை நெகிழும் தன்மையுடையதாக இருக்கும். முட்டையின் எடை 0.0567 கிராம். முட்டையிட்ட பின்பு குழியைக் குப்பையாலும் மணலாலும் மூடிவிட்டு அதன் அருகிலேயே பெண் முதலை காவல் புரியும்.



முட்டை அந்தக் கூட்டினுள் அறுபதில் இருந்து தொண்ணூறு நாட்கள் வரை பாதுகாக்கப் படுகின்றன. கூட்டின் வெப்பநிலையானது 3 0 - 3 3 * c செல்சியஸ் வரை இருக்க வேண்டும். கூட்டின் வெப்பநிலையே ஆண், பெண் குஞ்சுகளை தீர்மானிக்கின்றன. குறிப்பாக 30*c செல்சியஸ்க்கு கீழ் வெப்பநிலை இருக்கும் போது பெண் குஞ்சுகள் உருவாகின்றன. 33*c செல்சியஸ்க்கு அதிகமாகும் போது ஆண் குஞ்சுகள் உருவாகின்றன. நரிகள், ராட்சஷ பல்லிகள், பறவைகள் போன்றவை முட்டையையும் கூட்டையும் சேதப் படுத்தாமல் பெண் முதலை பாதுகாக்கிறது. சில ஆண் முதலைகள் குஞ்சு பொரிக்கும் வரை பெண் முதலைகளுடன் இணைந்து இருக்கும். குஞ்சுகள் முட்டைக்குள் இருந்து தனது பால் பற்களினால் முட்டையை உடைத்து வெளியேறுகின்றன. குஞ்சுகளை தாய் முதலை தனது வாயினால் கவ்விக்கொண்டு நீர் நிலையில் விடும். முதலைகளுக்கு ஆபத்தான பருவம் இந்த குஞ்சுப்பருவமாகும். இப்பருவத்தில் பறவைகள், மீன்கள், இதர கொன்றுண்ணிகளின் தாக்குதல் அதிகமாக இருக்கும். இதில் தப்பிப்பிழைக்கும் முதலைகளே நீண்ட நாள் உயிர் வாழ்கின்றன. இதன் வாழ்நாள் 50-80 ஆண்டுகளாகும்.



### உணவுப் பழக்கம்:-

முதலைகள் ஒரு மாமிசப்பச்சினி ஆகும். நீரில் உள்ள மீன்கள், பறவைகள் ஆமைகள் மற்றும் நீரின் அருகில் வரக்கூடிய அனைத்து உயிரினங்களையும் தனது உணவாக்கிக்கொள்ளும். இதில் மனிதர்களும் அடங்குவார்கள். முதலை பதுங்கித் தாக்கக் கூடிய விலங்கினம் ஆகும். நீருக்கடியில் காத்திருக்கும் முதலை நீரைத் தேடிவரும் விலங்குகளை நீர் அருந்தும் போது திடீரென்று தாக்கி நீருக்குள் இழுத்துச் சென்று உணவாக்குகிறது.




முதலை தனது உணவினை விழுங்கும். அதனால் அசை போட முடியாது. சில உணவுகளை அழுகும் வரை காத்திருந்து உண்ணும். முதலை நீருக்குள் உணவு உண்ணும் போது நீர் அதன் உடலுக்குள் சென்று விடாதா என்ற கேள்வி எழும். அதற்கான பதில் முதலையின் வாயினுள் இருக்கிறது. முதலையின் நாக்கு அதன் தாடையோடு ஒட்டி இருக்கும். மேலும் அதன் தொண்டைப்பகுதியில் தசைகள் அதிகமாக இருப்பதால் நீர் உட்புகாமல் தடுக்கிறது. முதலை உண்ணும்போது தனது தலையை நீருக்கு மேல் தூக்கிக்கொள்ளும். இவ் உயிரினத்தின் செரிமான சக்தி மிக அதிகம். அதன் உடம்பில் எலும்பினை கரையச் செய்யக் கூடிய அமிலம் சுரப்பதால் எளிதில் உணவு செரிமானம் ஆகிறது. முதலைகள் கற்களை விழுங்கும். அந்தக் கற்கள் உணவினை நன்கு அரைப்பதற்கு உதவுவதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். சிலவகை முதலைகள் மணல் மேடுகளில் வலைகளை அமைத்து வாழும். இவற்றால் நீண்ட நாள் உணவில்லாமல் வாழ முடியும்.

### முதலையின் வகைகள் :-

முதலைகள் வாழும் சூழ்நிலைகளைப் பொருத்து அதன் அளவு, எடை, நிறம், வடிவம் ஆகியவை மாறுபடும். ஆனால் அவற்றின் பண்புகளும் குணங்களும் மாறுபடாது.

**உலகத்தில் உள்ள முதலைகள்**

**Crocodilians of The World**



முதலையின் வாழ்விடத்தைக் கொண்டு அதனை உப்பு நீர் முதலை, நன்னீர் முதலை என இரண்டு பிரிவுகளாகப் பிரிக்கலாம். இவ்விரு முதலைகளுக்கும் உள்ள வேறுபாடு பற்றி இனி காண்போம்.

| நன்னீர் முதலை | உப்புநீர் முதலை |
|---|---|
| நன்னீர் முதலையின் தலைப்பகுதி ஆங்கில எழுத்தான U வடிவில் இருக்கும். இதனை அலிகேட்டர் என்று அழைப்பார்கள். | உப்புநீர் முதலையின் தலைப்பகுதி V வடிவத்தில் இருக்கும். இதனை குரோக்கடைல் என்றழைப்பார்கள். |
| கீழ் தாடை சிறிய தாகவும், மேல் தாடை பெரியதாகவும் இருப்பதால் மேல் தாடைப் பற்கள் வெளியே தெரியும். கீழ் தாடைப்பற்கள் தெரியாது. | மேல்தாடை மற்றும் கீழ் தாடை சரிசமமாக இருப்பதால் இருதாடை பற்களும் வெளியே தெரியும். |
| நன்னீரில் மட்டும் வாழும். இதன் உடம்பில் உப்பு நீரை கிரகிக்கும் சுரப்பிகள் இல்லை. | நன்னீர் மற்றும் உப்புநீரில் வாழக்கூடியது. கழிமுகம் மற்றும் கடலில் வாழக்கூடியது. உப்பு நீரை கிரகிக்கும் சுரப்பிகள் உண்டு. |
| இதனுடைய தாடைப்பகுதியில் மட்டும் உணர்வுக் குழிகள் உள்ளன. | இதன் தாடைப் பகுதியில் உணர்வுக் குழிகள் இல்லை. |
| சாதுவானது. மனித தாக்குதல் குறைவு. | மூர்க்க குணமுடையது. மனித தாக்குதல் அதிகம். |
| நன்னீரில் வாழும் முதலைகள் சில அலிகேட்டர், அமெரிக்கன் அலிகேட்டர், சைனீஸ் அலிகேட்டர், கருப்புக் கேயிமன், குவியாஸ் குட்டைக் கேயிமன். | உப்பு மற்றும் நன்னீர் முதலைகள் சில கியூபா முதலை, மோரிலெட்'ஸ் முதலை , அமெரிக்கன் முதலை, ஆப்பிரிக்க நீள்மூக்கு முதலை, ஜான்ஸ்டன்ஸ் முதலை, சதுப்பு நில முதலை, சையாமீஸ் முதலை, பிலிப்பைன் முதலை, நைல் முதலை. |
| உலகின் சில நாடுகளில் மட்டுமே காணப்படுகின்றன. | பெரும் பான்மையான நாடுகளில் காணப்படுகின்றன. |

## காடியல் முதலை:-



நீண்ட முக அமைப்பு உடைய இந்த முதலைகள் வடஇந்தியா, பாகிஸ்தான், நேபாளம், வங்களாதேசம், மியான்மர், பூடான் ஆகிய நாடுகளில் காணப்படுகின்றன. உலகிலேயே இதற்கு தான் நீளமான மூக்கு காணப்படுகிறது. கறுப்பு, பழுப்பு மற்றும் ஆலிவ் நிறத்தில் காணப்படும். இவை மீன்களை மட்டும் உணவாக்குகின்றன. மற்ற முதலைகளைவிட இதற்கு பற்கள் ( 110) அதிகமாக உள்ளன. 20 அடி வரை வளரும். எடை 680 கிலோவரை இருக்கும். ஆண் முதலையின் மூக்குப்பகுதி பந்து போல இருக்கும். இது நீரில் சலசலப்பை ஏற்படுத்தவும், பெண் முதலையை இனச்சேர்கைக்கு அழைக்கவும் பயன்படுத்துகிறது.

## அல்பினோ (அ) வெள்ளை முதலை:-



மெலனின் என்ற மரபணு குறைபாடு காரணமாக தோல் வெள்ளை நிறத்தில் காணப்படும். இதன் கண்கள் இளஞ்சிவப்பு நிறத்தில் இருக்கும். பெண் முதலை 8 அடி நீளமும், ஆண் முதலை 11 அடி நீளம் வரை வளரக்கூடியது. இவற்றின் எடை 1000 கிலோவாகும். தற்போது உலகில் 44-100 வெள்ளை முதலைகள் உள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர்.

### முதலை இனங்களின் அழிவு :-

மாறிவரும் காலச் சூழ்நிலைக்கு ஏற்ப முதலை இனங்கள் அழிவின் விளிம்பில் உள்ளதாக ஆய்வாளர்கள் கருதுகின்றனர். இதற்கு முக்கியக்காரணம் உணவுச் சங்கிலியில் முதல் இடத்தில் உள்ள மனிதர்கள் தான். காடுகளை அழித்தல், நீரை மாசுபடுத்துதல் மற்றும் ஏரி, குளங்களின் ஆக்கிரமிப்பின் காரணமாகவும் அழிகின்றன. முதலைகள் தோலுக்காகவும், இறைச்சிக்காவும் மிக அதிகமாக வேட்டையாடப் படுகின்றன. இதனால் உலகின் பலபகுதிகளில் இவ்வினம் அழிந்து விட்டது. முதலைகள் நீர் நிலைகளின் தோட்டிகள் என்றழைக்கப்படுகின்றன. ஏனெனில் நீர் நிலைகளில் இறந்த விலங்குகளின் உடல்களை உண்டு விடுவதாலும் ஆறுகளில் உள்ள உயிரினங்களின் பெருக்கத்தைக் கட்டுப்படுத்துவதாலும் “இயற்கை சமநிலைவாதிகள்” எனப் பெயர் பெற்றன.

### கலைப்பொருள்கள் :-



முதலையின் தோலில் ஆண், பெண்களுக்குத் தேவையான கலை மற்றும், அழகு சாதனப் பொருட்களான கைப்பைகள், இடைவார் (belt), பணப்பைகள் (wallet), காலணிகள், ஆடைகள், சாவிக்கொத்து, கழுத்தணிகள், கை பேசிக்கான பாதுகாப்பு உறை போன்றவை தயாரிக்கப்படுகின்றன.

### முதலை கடவுள் :-

பண்டைய எகிப்திய மக்கள் நைல் நதியின் வெள்ளப் பெருக்கத்திற்கும் அதன் இனிமைக்கும் முதலை தான் காரணம் என்று எண்ணி அதனை வழிபட்டனர். மனிதனின் உடலும் முதலை தலையும் கொண்ட அக்கடவுளின் பெயர் ஸோபெக். எகிப்திய ஓவியங்களிலும் சிற்பங்களிலும் முதலைகள் காணப்படுகின்றன. சிங்கத்தின் உடலும் முதலை தலையும் கொண்ட விலங்கு சிற்பமும் காணப்படுகிறது. மேலும் ஆப்பிரிக்க பழங்குடி மக்கள் முதலைகளை வணங்குவதோடு, அவர்களது உடம்பில் முதலைகளைப் போல தழும்புகளையும் ஏற்படுத்திக் கொள்கின்றனர்.

## முதலை வளர்ப்பு மற்றும் கறி :-



மேற்கத்திய நாடுகளில் சில முதலைகளை செல்லப் பிராணியாகவும், சிலர் மாமிசத்திற்காகவும் வளர்க்கின்றனர். இயற்கையான முறையில் வேட்டையாடியும், முதலை பண்ணை அமைத்தும் உணவு தேவைகளை நிறைவு செய்கின்றனர்.

## முதலைகள் காப்பகம் :-

தமிழ்நாட்டில் இரண்டு இடங்களில் முதலைப் பண்ணை உள்ளது. சென்னையில் *1976*- லில் ரோமுலேசு விட்டேக்கர் என்பவரால் முதலைப் பண்ணை தொடங்கப்பட்டது. இந்தப் பண்ணையில் *17* வகையான முதலைகள் உள்ளன. திருப்பூர் மாவட்டத்தில் உள்ள அமராவதி அணைப் பகுதியில் *1976*- ஆம் ஆண்டு முதல் முதலைகள் பாதுகாக்கப்படுகின்றன. இங்கு நூற்றுக்கும் மேற்பட்ட முதலைகள் உள்ளன.



## முதலையைக் குறிக்கும் தமிழ் சொற்கள் :-

முதலைக்கு இடங்கர், கடு, கரவு, கோதிகை, சிஞ்சுமாரம், மகரம், முசலி என்ற பல பெயர்கள் வழங்கி உள்ளன. ஆண் முதலையை ‘கராம்’ அல்லது ‘கரா’ என்றும் குறிப்பிட்டுள்ளனர். மனிதரைத் தாக்கும் முதலையை ‘ஆட்பிடியன்’ என்றும் தீங்கிழைக்காத முதலையை ‘சாணாகமுதலை’ என்றும் அழைத்து வந்துள்ளனர்.

முதலைகள் இயற்கையின் கொடைகள். அவைகள் நமக்கு செய்யும் நன்மைகளை விட அவற்றுக்கு நாம் செய்யும் தீமை தான் அதிகம். எனவே நன்றி மறக்காமல் அதனைப் பாதுகாப்பது நம் கடமை.

***

பல்லி இனத்தைச் சார்ந்த முதலை

நிலம், நீர் இரண்டிலும் சூழ்நிலைக்கேற்பத் தன்னை

தகவமைத்துக்கொண்டு வாழ்கிறது.

ஆதி தொட்டு... இன்று வரை

தன் இனம், தனக்கான இடம்,

அதனைக் காத்துக்கொள்ளும் சாமர்த்தியம்,

தனக்கான உணவை அடைய முனையும் சாதுர்யம் போன்ற

முதலையின் பண்புகள்

அனைத்தும் ஆச்சர்யத்தின் உச்சமே !






செ.மெல்வின்ராஜா., M.A.,M.Phil.,B.Ed.,

[மொழி ஆய்வாளர்]

உடன் உலகத்தமிழ்க் கல்விக்கழக தமிழ் ஆசிரியர்கள்

மற்றும் வரைகலையாளர்கள்.



உலகத்தமிழ்க் கல்விக்கழகம்

www.worldtamilacademy.com www.tamilacademy.com